1973 ஆகஸ்ட் 3] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

இந்தப் பேரவையில் கடந்த ஒன்பது திங்களாகப் பேரவையை நடத்தி வந்த மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்கள் சட்டத் துறையில் பயின்று, சட்டமன்றத்தில் பயிற்சி பெற்றிருக்கும் நிலையைப் பார்க்கின்ற நேரத்தில் அவரைப் பேரவைத் துணைத் தலைவராகப் பெற்றதில் நான் பெரும் பேறு பெற்றிருக்கிறேன் என்று மனதார நினைக்கிறேன்.

இந்த மன்றத்தில் மன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற விதி முறைகளுக்கு உட்பட்டுப் பணியாற்றுகின்ற நிலையில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று வேற்றுமை பாராட்டாமல் அவர்கள் உரிமைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்; காப்பாற்று வேன் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

அதே நேரத்தில், உறுப்பினர்கள் உரிமையைக் காட்டிலும் இந்த மன்றத்தின் பெருமை, மாபு பெரிது என்பதை எல்லோரும் உணரவேண்டும். இந்த மன்றத்தின் பெருமை மன்றத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் காட்டு கின்ற முறையிலேதான் இருக்கிறது. ஆகவே, உங்களுடைய உரிமையைக் காக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறுகின்ற அதே நேரத்தில், இந்த மன்றத்தின் பெருமையைக் காக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை உணர்வீர்கள். அந்தக் கடமையுணர்வுடன் நீங்கள் காரியமாற்ற வேண்டுமென்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73.)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-மாற்று) திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/73) அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்-கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மோட்டார் எரியெண்ணெய் விற்பனைகளுக்கு வரி விதித்தல்—கேளிக்கைகளுக்கு வரி விதித்தல் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.